1973 நவம்பர் 28]

தானியப்பாடியில் பிற்பட்ட வகுப்பு மாணவர் இல்லம்

*456 வினா திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன்: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

செங்கம் வட்டம், தானிப்பாடி கிராமத்தில் பிற்பட்ட வகுப்பினர் மாணவர்கள் விடுதி கட்டும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: இல்லை.

திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன்: தானிப்பாடி பகுதியில் மிகவும் பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த லம்பாடிகள் என்று சொல்லப்படுபவர்கள் 20-க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருக்கிறார்கள். எனவே, அடுத்த ஆண்டிலாவது இந்த விடுதியைத் திறப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே நிதிநிலை நமக்கு அனுகூலமாக இருக்கும்பொழுது இது பரிசீலனை செய்யப்படும்.

சேரன்மகாதேவி கோட்டத்தில் தோபிகானாக்கள்

*457. வினா.—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில், சேரன்மகாதேவி ரெவின்யூ டிவிஷனில் உள்ள பஞ்சாயத்துக்களில் தோபிகானா கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எங்கெங்கு கட்டப்படவிருக்கின்றன?

*மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) இல்லை.

(இ) எழவில்லை.